அம்பாள் துணை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

பதிவு இல. J/3/84/23-09-1988

20ஆவது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா அறிக்கை

★
★★

2002

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

2002

நிர்வாகசபை :

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. – *தலைவர்*
திரு. மு. சபாநாதன், *பதில் நீதிபதி – உப-தலைவர்*
திரு. ந. செல்வநாயகம் – *உப-தலைவர்*
திருமதி ம. இராமநாதர் – *பொதுச்செயலாளர்*
திரு. அ. சண்முகநாதன் – *பொருளாளர்*
திரு. நா. தவநாதன் – *நிர்வாகச் செயலாளர்*
திரு. சு. ஏழுர்நாயகம் – *உப-பொருளாளர்*
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்
திரு. மு. அருளையா
திரு. ச. விநாயகரத்தினம்
திரு. ச. கந்தையா
திரு. சி. குமாரசாமி
திரு. நா. தவமணிநாயகம்
திரு. ஆறு. திருமுருகன்
திரு. சு. முருகையா
திரு. சி. புஷ்பநாதன் *(கொழும்புப் பிரதிநிதி)*
திரு. நா. சிவநாதன் *(இந்து இளைஞர்சங்கப் பிரதிநிதி)*

உ

அம்பாள் துணை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

இருபதாவது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா அறிக்கை

10 - 03 - 2002 ஞாயிற்றுக்கிழமை

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவியின் திருவருளை நெஞ்சிலே நிறுத்தி அனைவரையும் வணங்கி பரிசளிப்புவிழா அறிக்கையை உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன்.

இன்றைய விழாவுக்குத் தலைமை தாங்குகின்ற எங்கள் வணக்கத்துக்குரிய கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்களே,

வணக்கத்துக்குரிய சிவாச்சாரியப் பெருமக்களே,

நல்லை ஆதீன குருமகாசன்னிதானம் அவர்களே,

முதன்மை விருந்தினர்
திருமதி கலைவாணி இராமநாதன், M. A. அவர்களே,

சிறப்பு விருந்தினர்
செல்வி கெங்காமலர்தேவி சின்னையா அவர்களே,

மேலும் ஆசிவழங்க வந்திருக்கும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அதிபர் அவர்களே,

அன்பான பெருமக்களே,

குழந்தைகளே,

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் நாம் கூடியிருக்கின்றோம். இவ்விழாவுக்குத் தலைமை தாங்கும் எங்கள் வணக்கத்துக்குரிய கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களை அறியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். அவர்களின் அரவணைப்பிலே வாழ்ந்து கல்வி கற்றுக்கொண்டிருக்கும் எங்களுக்கு எந்தவிதமான குறையுமில்லை என்பதை பெருமிதத்துடன் தெரிவிக்கிறேன். 77 வயதைப் பூர்த்தி செய்திருக்கின்ற எங்கள் அன்னையை முதலில் வாழ்த்தி வணங்குகிறேன்.

எங்கள் பணிகளுக்கெல்லாம் ஆசியும் வாழ்த்தும் என்றென்றும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள் இங்கு வருகை தந்திருக்கும் சிவாச்சாரியப் பெருமக்களும், நல்லை ஆதீனத்தின் முதல்வரும் ஆவர். இவர்கள் இங்கு வருகை தருவதினால் எங்கள் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் தெய்வீக அருள் கிடைக்கிறது.

அடுத்து இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி கலைவாணி இராமநாதன், M. A. அவர்களை வாழ்த்தி வணங்கி வரவேற்கிறோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையின் தலைவராக இருப்பவர் இவர். தான் கற்ற கல்விக்கு ஏற்ப அடக்கமும், சொல்வன்மையும் ஆழ்ந்த அறிவும் உடைய அம்மையார் இவர். இன்று எங்கள் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து நல்லுரை வழங்கி எமது இல்லத்தை ஊக்குவிக்க இருப்பது எமக்கெல்லாம் பெருமிதம் அளிக்கின்றது.

அடுத்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் செல்வி கெங்காமலர்தேவி சின்னையா அவர்களை இருகரம் கூப்பி வரவேற்கிறோம். இவ்வம்மையார் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய அதிபராக இருந்து சிறந்த கல்விப்பணி ஆற்றி வருபவர். ஆரம்ப பாடசாலைகளில் முதன்மையான ஒரு பாடசாலையாக மிளிர வைத்த பெருமை அம்மையார் அவர்களையே சாரும்.

அடுத்து ஆசியுரை வழங்க வந்துள்ள திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களை இருகரம் கூப்பி வரவேற்கிறோம். இல்லப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரும்பங்கு ஆற்றிவருபவர்.

மேலும் பிறந்த மண்ணைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் நலன்விரும்பிகள் பலர் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் எமது வணக்கமும் வரவேற்பும் உரித்தாகுக.

மகளிர் இல்லத்தில் இடம்பெற்றோர் விபரம்:

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரை கல்வி கற்போர் எண்ணிக்கை	45
யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள்	03
யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் கல்வி கற்பவர்	01
யாழ். பல்கலைக்கழக வெளிவாரியாகக் கல்வி கற்பவர்	01
க. பொ. த. உயர்தரத்தில் கற்பவர்கள்	05
க பொ. த சாதாரணதரம் 2001 டிசம்பரில் தோற்றியோர்	06
திருமகள் அழுத்தகத்தில் பணிபுரிவோர்	01
மகளிர் இல்லப் பணியாளர்	06
55 வயதுக்கு மேற்பட்ட அன்னையர்கள்	12
ஆலய அலுவலகத்தில் பணிபுரிபவர்கள்	03
துர்க்காதேவி ஆலய அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிப்போர்	04
சைவத்தமிழ் ஆய்வு நூலகப் பணியாளர்கள்	03
கோசாலைப் பணிபுரிவோர்	02
சிற்றூழியர்கள்	04
மொத்தம்	95

கல்வி :

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் முதலாம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. உயர்தர வகுப்பு வரை இல்லப் பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள். பிரத்தியேக வாகன வசதி செய்து இவர்களுடைய போக்குவரவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கல்லூரியில் மாணவர் தலைவர்களாக 03 பேர் பணியாற்றுகின்றனர். விளையாட்டுத் துறையிலும், இசைத்துறையிலும், நடனம், நாடகத் துறைகளிலும், பேச்சு, கட்டுரைப் போட்டிகளிலும் எமது இல்லப் பிள்ளைகள் இராமநாதன் கல்லூரியில் முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது. 2001ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றியோரில் நால்வர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் வெளிவாரிப் பட்டதாரியாக கல்வி கற்று வருகிறார். இந்த வருடம் சித்திரை மாதத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுப்போர் நான்கு பேர். இவர்கள் பரதம், இசை, நாடகம் ஆகிய துறைகளில் சிறப்பான ஈடுபாடு கொண்டவர்கள். பேச்சுத் துறையிலும், கட்டுரை எழுதும் துறையிலும் திறமையானவர்கள். 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றியோர் 5 பேர் ஆவர்.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் :

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவு தினப் பேச்சுப் போட்டியில் அதிமேற்பிரிவில் செல்வி கு. சர்மிலா அவர்கள் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடாத்திய ஆறுமுகநாவலர் பேச்சுப் போட்டியிலும் அதிமேற் பிரிவில் முதலாமிடம் பெற்று தங்கப பதக்கத்தை பெற்றுள்ளார். அத்துடன் முதியோர் தினம் தொடர்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியிலும் அதிமேற் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

செல்வி து. துஷ்யந்தி அவர்கள் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவுப் பேச்சுப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். இவர் இதே நினைவுக் கட்டுரைப் போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இராமநாதன் நினைவுதினப் பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் செல்வி பா. திவ்யா அவர்கள் முதலாமிடத்தைப் பெற்றார். செல்வி உ. உதயவாணி அவர்கள் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

புராணபடனம், கதாப்பிரசங்கம், நாட்டிய நாடகம் போன்ற போட்டிகளிலும் பங்கு பற்றி பல பரிசில்களை இவர்கள் பெற்றுள்ளனர்.

வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்பட்டு வரும் சங்கீதம், நடனம், பண்ணிசை ஆகியவற்றில் முதலாம், இரண்டாம்தர சித்திகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரத்தியேக பாடபோதனை :

கணிதம், ஆங்கிலம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு இல்லத்திலே வந்து கற்பிக்க பிரத்தியேக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள் ஆங்கில பாடத்தையும், திருமதி காளிதாசன் அவர்கள் கணித பாடத்தையும், சங்கீத பாட போதனையை திரு. சி. சிவஞானராஜா அவர்களும் கற்பிக்கின்றனர்.

க. பொ. த. உயர்தர மாணவர்கள், க. பொ. த. சாதாரணதர மாணவர்கள், புலமைப் பரிசில் எடுக்கும் மாணவர்கள் ஆகியோர் பிரத்தியேக கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பாடபோதனை பெற்று வருகிறார்கள்.

மாணவர் மன்றம் :

மாதம் தோறும் வார இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர் மன்றம் நடாத்தப்படுகிறது. இல்லப் பிள்ளைகளின் நிர்வாகம் சம்பந்தமான ஆற்றல்கள்

வளர இம்மன்ற்ம் பெரிதும் உதவுகிறது. கல்வி வளர்ச் சிக்கான பேச்சு, கட்டுரை, கவிதை, பட்டிமண்டபம், ஆடல், பாடல், நாடகம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மன்றக் கூட்டங்களிலும் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது அத்துடன் 'சுடரொளி' என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டு மாணவர்களது ஆக்கங்கள், பொதுஅறிவு, கணித விஞ்ஞான விளை விடை போன்றவை இடம்பெறுகின்றன. மாணவர் மன் றப் பொருளாளரினால் நிதி சேகரிக்கப்பட்டு அந்நிதி யின் முலம் பரிசளிப்புகள், இல்லத்திலிருந்து விலகிச் செல்லும் பிள்ளைகளுக்கான பிரியாவிடை வைபவம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இம்மகளிர் இல்ல இருபதாம் ஆண்டு நிறைவில் விசேடமாக எடுத்துக் கூறக் கூடியதாக யாழ். பல் கலைக் கழகத்தில் 2001 ஆண்டு ஒக்ரோபர் மாதம் மூன்று மாணவிகள் பட்டம் பெற்றமை அமைகிறது. செல்வி த. தவனேஸ்வரி தமிழ் சிறப்புக்கலைப் பட்டதாரியாகவும் செல்வி வி. வடிவாம்பிகை இசை நுண்கலைமாணிப் பட்டதாரியாகவும் செல்வி சு தயாரூபி சமூகவியல் சிறப்புப் பட்டதாரியாகவும் பட்டம் பெற்றமை குறிப் பிடத்தக்கது.

நிதி உதவி :

மகளிர் இல்லப் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி, வைத்தியம் ஆகியவற்றுக்கு உள்நாட்டு அன்பர் களும் வெளிநாட்டு அன்பர்களும், வெளிநாட்டு நிறு வனங்களும் தாராள சிந்தையோடு நிதி உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறுவனங்களின் பெயர்களையும் ரூபா இருபத்தை யாயிரத்துக்கு மேற்பட்ட அன்பளிப்புக்களை உதவியோ ருடைய பெயர்களையுமே மட்டும் கீழே தருகிறோம். ஏனையோருடைய நிதி உதவி கணிசமாக இருப்பதால்

இவ்வறிக்கையில் குறிப்பிட முடியாமல் இருக்கிறது. ஆனால் இவர்களுடைய முழு அன்பளிப்பு விபரங்களும் வருடாந்தக் கணக்கறிக்கையில் காட்டப்படும்.

இலண்டன் தமிழ் அநாதைகள் நம்பிக்கை நிதியம்
கனக துர்க்கை அம்மன் ஆலயம், இலண்டன்
அபயகரம், அவுஸ்திரேலியா
அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு
சிட்னி முருகன் கோயில் சைவமன்றம்,
அவுஸ்திரேலியா
ஜேர்மனி, பேர்ஸின் சைவமகாசபை
திரு. க. இரவிச்சந்திரன், ஜேர்மனி
திருமதி செந்தில் செல்வம் இரத்தினாதிக்கம்,
அமெரிக்கா
Dr. V. கருணாகரன், U. K.
திரு. அருணாசலம் கிருபாகரன், U K.
Dr. A. மகேந்திரராஜா, U K.
திருமதி நிர்மலா நகுலேந்திரன், அமெரிக்கா
திரு. லிங்கேஸ்வரன், பண்டத்தரிப்பு
திருமதி மாலினி ஸ்ரீ காந்தா, டென்மார்க்
திருமதி இரத்தினம், U K.
திருமதி கணேசலிங்கம், U. K.
திரு. திருமதி பரஞ்சோதி, அவுஸ்திரேலியா
ஜெனுஷா ஜீவானந்தா, கொக்குவில்
திருமதி கனகரட்ணம் புவனேஸ்வரி, U. K,
திரு. V. நாராயணதாஸ், அவுஸ்திரேலியா
திரு. திருமதி சண்முகதாஸ், சுவிற்சலாந்து
திரு. திருமதி விமலராஜா, வவுணாவத்தை
திரு. திருமதி மதுரலிங்கம், சுவிற்சலாந்து
திரு. M. K. ஸ்ரீதரன், U. K.
திருமதி இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம், U. S A.

மேற்காட்டியவர்களோடு மேலும் பல நிறுவனங்களும், தாராள சிந்தை உடையோரும், அறக்கொடையாளர்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து இல்லத்தின் வளர்ச்சிக்காக அன்பளிப்புக்களை வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றோடு திருமணங்கள், பிறந்த தினம், சிரார்த்த தினம் ஆகிய நாட்களில் இல்லப்பிள்ளைகளுக்கு உணவு வழங்க நிதி வழங்குவோர் பலர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம் :

மகளிர் இல்லத்தின் ஒரு அங்கமாக 55 வயதுக்கு மேற்பட்ட தனிப்பட்ட பெண்கள் 12 பேர் இடம்பெற்றுள்ளார்கள். இவர்கள் வேறு எவரின் உதவியையும் நாடாது மகளிர் இல்லத்தையே நம்பி இருப்பவர்கள். தங்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றக் கூடியவர்கள். ஆலயப்பணி, மகளிர் இல்லப்பணி ஆகியவற்றையும், சரியைத் தொண்டுகளையும் நல்லபடி ஆற்றுபவர்கள். இவர்களுடைய உணவு, உடை, வைத்தியச்செலவு மற்றும் அவர்களுடைய கைச்செலவு ஆகியவற்றை மகளிர் இல்லப்பணத்திலே இருந்துவழங்கி வருகிறோம். மனநிறைவோடு இவர்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லூரில் அமைந்த ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் :

நல்லைக் கந்தப் பெருமானின் திருவருட் துணை கொண்டு இம்மண்டபப் பணிகள் செம்மையாக நிறைவேறுகிறது. திருமணம், அன்னதானம், குருபூசைகள், நினைவு விழாக்கள் ஆகியவை அந்த அந்தக் காலங்களில் நல்லபடி நிறைவேறுகிறது. நல்லைக்கந்தப்பெருமானின் உற்சவ காலங்கள் இருபத்தைந்து தினங்களும் இம்மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படுகிறது. விசேட உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் பணி இடம்பெறுகிறது. இவற்றுக்கெல்லாம் ஆதரவு தருகின்ற

யாழ் குடாநாட்டு வர்த்தகப் பெருமக்களையும் ஏனைய கொடை வள்ளல்களையும் மனமாரப் பாராட்டி நன்றி கூறுகிறோம். மேலும் அறநெறிப் பாடசாலைகளின் பரிசளிப்பு விழா, கந்தசஷ்டி விழா, யோகர் சுவாமி களின் குருபூசைவிழா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசை விழா ஆகியனவும் இங்கு சிறப்பாக இடம்பெறு கிறது. கந்தசஷ்டி விழாவின் பூர்த்தி நாளில் கந்தப் பெருமானின் அடியவர்களுக்கு பாறணைப் போசனம் வழங்கப்படுகிறது

நன்றி கூறுகிறோம்:

இம் மகளிர் இல்லத்தின் இருபதாவது ஆண்டு விழா விலே பலருக்கு நன்றிகூறவேண்டிய கடமைஎமக்குண்டு.

★ எங்கள் இல்லப்பணிகளுக்கு ஆதரவு வழங்கிவரும் தேவஸ்தான நிர்வாக சபையினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், துர்க்காதேவி பெண் கள் தொண்டர் சபையினர், இல்லப்பணிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் யாழ். அரச அதிபர், வலி. வடக்கு பிரதேச செயலர்

★ எமது பணியை நல்லபடி ஊக்குவித்து அன்பளிப்பு களை நல்கிவரும் உள்ளூர் வெளியூர் அன்பர்கள்

★ மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு வைதிய உதவி வழங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை யினர், Dr. ம. மகேசன் (உடுவில்), Dr. ஸ்வரி கந்தையா ஆகியோர்

★ இல்லக் கடமைகளிலும் மற்றும் மகளிர் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளிலும் முன்னின்று பயிற்சி அளித்து உதவும் அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

★ தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைவர், மற்றும் பணியாளர்கள்.

★ நீர்மின் இணைப்பு வேலைகளைச் செய்து உதவும் திரு. த. தயானந்தன், திரு. சௌந்தரராஜன் ஆகியோர்

★ நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபப் பணியாளர்கள், இங்கு நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு பணியாற்றி வரும் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள்

★ எங்கள் நிர்வாகசபை கொழும்புப் பிரதிநிதி திரு. சி. புஷ்பநாதன் அவர்கள்

★ கடிதத் தொடர்புகள், அச்சகப் பணிகள், அன்பளிப்புகள், வங்கி வைப்புகள் ஆகிய பணிகளைச் செம்மையாக நிறைவேற்றித்தரும் அலுவலர் திரு. கா. சிவபாலன், திரு. பு. ஸ்ரீகாந்தன், செல்வி த. தவனேஸ்வரி, செல்வி த. மஞ்சுளா ஆகியோர்

★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் நிகழ்சிப் பிரிவினர், இலங்கை வானொலி யாழ்சேவையினர்

★ காலமும் நேரமும் அறிந்து செய்திகளை வெளியிடும் உதயன், வலம்புரி, தினக்குரல், தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைத் துறையினர்

★ மகளிர் இல்லக் கணக்கு விபரங்களை நல்லபடி ஆற்றி உதவும் இலங்கைவங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம், யாழ்ப்பாணம், பம்பலப்பிட்டி இலங்கை வங்கி, யாழ்ப்பாண வர்த்தக வங்கி

★ மகளிர் இல்ல அச்சுப்பணிகளை நல்லபடி நிறைவேற்றித்தரும் திருமகள் அழுத்தகத்தினர்

ஆகியோருக்கு எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

என்பதை நினைவில் இருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து ஆவன செய்வோமாக.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.
தலைவர்

ஸ்ரீ கலைவதனி
(இல்ல மாணவி)

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை,
03-02-2002.

ஒ

இல்லக் கீதம்

பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று — வாழிய

அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லி யூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் — வாழிய

சரணம்

ஒழுக்கம் உயர்பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்ற மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற — வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக் கூடக்கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டுமிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும் — வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க — வாழிய

இல்லப் பணியாளர் விபரம்

திரு. கா. சிவபாலன் – *பிரதம லிகிதர்*
செல்வி த. மஞ்சுளா – *உதவி லிகிதர்*
செல்வி த. தவனேஸ்வரி – *உதவி லிகிதர்*
செல்வி ச. ரேவதி – *உதவி லிகிதர்*
செல்வி க. காமாட்சி
செல்வி பெ. செல்வராணி
செல்வி எஸ். மீனா
செல்வி சு. சுகந்தினி
திருமதி சி. தேவி

வங்கிகள் :

1. இலங்கை வங்கி, சுன்னாகம் க/கு — 4923
2. இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் க/கு – 12977
3. இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி க/கு–0037-01-0004020-4

உள்துறைக் கணக்காய்வாளர் :
திரு. இ. யுவன்ராஜ்

பட்டயக் கணக்காய்வாளர் :
செல்வேந்திரா அன். கோ. யாழ்ப்பாணம்

திருமகள் அழுத்தகம், சென்னை-600 014.